★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55636

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 13உ சனி (26—5—56) ★ ★ வெளியூர்: வைகாசி 14உ ஞாயிறு (27—5—56) [இதழ் 295

நிசாம் இப்போதும் மன்னர்தானே!

புதுடில்லி, மே. 24—

ஐதராபாத் நிசாம், 'மன்னர்' என்ற பட்டம்—பதவி பறிக்கப்பட்டு, 'இராஜப்பிரமுகர்' என்ற பெயர் சூட்டப்பட்டாலும், 'நிசாம்' என்ற வாழ்க்கைநிலையிலிருந்து சிறிதும் மாறக்காணவில்லை.

நிசாமுக்குக் கிடைத்துவந்த அரண்மனை வாழ்வு, அரசபோகம், இன்றும் கிடைத்துக்கொண்டுதானே இருக்கிறது.

நிசாமின் சொந்தச் சொத்தாக ரூ. 300 கோடிவரை இருக்கிறதாம்!

தமக்குக் கிடைத்துள்ள தகவல் இது என்று தோழர் அசோக் மேத்தா, மக்கள்சபையில் தெரிவித்திருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

அறிவு, ஆற்றல் படையைத் திரட்டுவோம்

வடநாட்டு அரசியல், பொருளாதார ஆதிக்கத்தை ஒழிப்போம்

இந்தி புகுத்தப்படுவது ஏகாதிபத்திய அறிகுறிதானே!

ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாட்டவருக்கு அநீதி ஏன்?

இந்நாட்டுவளம் இந்நாட்டிற்கு பயன்பட முடியாதா?

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் மாநில மாநாட்டுத் தலைமை உரை

தென்னாட்டவருக்கு இந்தி எந்த அவசியத்திற்காக வேண்டும்? வடநாட்டவரின் ஆதிக்கம் தென்னாட்டில் பரவியிருக்கிறது என்பதன் அறிகுறிதானே இரயில் நிலையங்களில் காணப்படும் இந்திப் பெயர்கள்?—தபால் சாதனங்களில் அச்சடிக்கப்பட்டிருக்கும் இந்தி மொழி?

பொருளாதாரத் துறையில் வடநாட்டவர் தென்னாட்டவர் மீது எப்படியெல்லாம் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள்? இதன் விளைவு என்ன?

அரசியல் துறையில் வடவர் ஏகாதிபத்தியம் எத்தகைய பிடிப்பைத் தென்னாட்டின் மீது கொண்டிருக்கிறது?

இந்த வடவர் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பது எதற்காக? எப்படி? ஏன்?

—என்பவற்றை, தமது தலைமை உரையின் இறுதிப் பகுதியில் விளக்கியிருக்கிறார், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்; அது இங்கு தரப்படுகிறது :—

"வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள், இந்தி மொழியை இந்தியாவின் பொது மொழியாக்கிவிட வேண்டும் என்று அவசர அவசரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

"அரசியல் சட்டத்தில் கண்டுள்ளபடியே—இன்னும் 15 ஆண்டுகளுக்குப் பிறகே, இந்தி, இந்தியாவில் நுழைக்கப்படும் என்று கூறப்பட்டாலும் அதற்கு முன்பாகவே—இப்போதே, இந்திய சர்க்காரின் எல்லா நிர்வாகத் துறைகளிலும் இந்தி புகுத்தப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம்.

"இரயில்வே நிலையங்கள், அஞ்சல் இலாகா வெளியிடும் அட்டைகள், பணம் அனுப்பும் நமூனாக்களில் எல்லாம் இந்தி திணிக்கப்பட்டிருப்பதை நாட்டவர் காண முடியும்.

"இங்கு—தென்னாட்டைப் பொறுத்தவரையில், இந்தி இம்மியளவும் தேவை இல்லை என்று நாம் கூறி வருகிறோம். இங்கே, 100-க்கு 83 பேர்களுக்கு இன்னும் தங்களின் தாய்மொழியையே எழுதவும், படிக்கவும் தெரியாது. எஞ்சிய 17 சதவிகிதத்திலும், சுமார் 5 சதவிகிதத்தினர் மட்டுமே நன்கு எழுதவும், படிக்கவும் கற்றுக் கொண்டிருக்கின்றனர். எஞ்சிய, 12 சதவிகிதத்தினரும் அரைகுறைப் படிப்பினர்தான்.

இந்த நிலையில் உள்ள மக்களைக் கொண்ட இந்தத் தென்னாட்டில், என்ன அவசியத்திற்காக இரயில் நிலையங்களில் இந்தியில் பெயர் எழுதப்பட வேண்டும்? தபால் கார்டுகள், பணம் அனுப்பும் நமூனாக்கள் ஆகியவற்றில் எல்லாம இந்தி எதற்காக?

"பாபநாசம், முத்துப்பேட்டை என்று தமிழில் எழுதப்பட்டிருக்கும் பெயர்களைப் படித்துவிட்டல்ல இப்போதுள்ள மக்கள், அந்த இரயில் நிலையங்களில் இரயிலிருந்து இறங்குவது!

"தோட்டம் வந்துவிட்டது; மாடி வீடு வந்துவிட்டது; சர்ச் வந்துவிட்டது; மசூதி வந்துவிட்டது; ஆகவே, பாபநாசம் வந்துவிட்டது' என்று சில அடையாளங்களை வைத்துக்கொண்டுதான் பெரும்பாலான மக்கள், இரயில் நிலையத்தில் இறங்குகிறார்கள். இப்படித் தாய்மொழியையே இன்னும் அவர்கள் கற்றுக்கொள்ளாத நிலையிலிருக்கும்போது, இந்தியில் எந்த அவசியத்திற்காக அங்கெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது? அவசியத்தை ஒட்டியா, இந்தியில் பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன? கிடையாதே! வடநாட்டு ஆதிக்கம் இங்கே பரவியிருக்கிறது என்பதன் அறிகுறியா? அல்லது அவசியத்தின் அறிகுறியா, இந்த இந்திப் பெயர்கள்?

"வெளிநாட்டிலிருந்து வருகிறவர்களுக்கு, இந்தியா முழுதும் இந்தி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது —பரவியிருக்கிறது என்று எடுத்துக் காட்டுவதற்குப் பயன்படத்தானே, இந்த இந்திப் பெயர்கள்? வடநாட்டவர் தங்கள் ஆதிக்கத்தை தென்னாட்டில் நிலைநாட்ட எண்ணுகிறார்கள் என்பதன் சின்னமதானே இந்த இந்தி?

"அதனால்தான் நாம், அந்த இந்திப் பெயர்களைத் தார் பூசி அழித்தோம்.

"அப்படி அழித்துவிட்டதால், இந்திப் பெயர்கள் அழிந்து விட்டனவா — என்றால், 'அழியும், சீக்கிரமே!'

"அது அழியும் வரையில், மக்களுக்கு இந்தி எதிர்ப்பு எண்ணத்தைத் தொடர்ந்து ஊட்டிக் கொண்டே இருப்போம்!

"இப்போதுதானே, இரயில் நிலையப் பெயர்ப் பலகைகளில், மேலே இருந்த இந்தியை கீழே கொண்டு வந்திருக்கிறார்கள்!

"தென்னாட்டு மக்களுக்கு இந்தி என்ன அவசியத்திற்காக வேண்டும்?

"இங்கு, கிராமக் கர்ணம் முதல் மாநில முதல்வர் காமராசர் வரை தமிழில் பேசவும், எழுதவும் முடியுமே! அப்படியிருக்க, இந்தி எதற்காக? காமராசர் டில்லியுடன் பேசவேண்டுமானால், இந்தி வேண்டியிருக்கலாம்; ஆனால், காமராசரோ, டில்லியோ—பர்மாவுடன், இங்கிலாந்துடன், ரஷ்யாவுடன் தொடர்பு கொள்ள வேண்டுமானால், தமிழும் போதுமானதல்ல—அதேபோல, இந்தியும் போதுமானதல்ல! அகில உலகப் பொது மொழியான ஆங்கிலம் இருவருக்கும் தேவைப்படுகிறது. அந்த அகில உலகப் பொது மொழியான ஆங்கிலமே இந்தியாவின் பொது மொழியாக இருக்கலாம் என்று நாம் வற்புறுத்திவருகிறோம்.

"தமிழ் மொழியுடன், அகில உலகப் பொது மொழியான ஆங்கிலத்தையும் கற்றுக்கொண்டால், வெளிநாட்டவருடன் மட்டுமின்றி, டில்லியுடனும் நாம் தொடர்பு கொள்ள முடியும் என்னும்போது, இந்தி எதற்காக?

"இந்தியாவில் 14 தேசிய மொழிகளை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; அந்தந்த வட்டாரத்தில், வட்டாரத் தாய் மொழியும் ஆங்கிலமும் கற்றுக்கொண்டால், இந்த 14 மொழி பேசிற மக்களும் ஒருவருக்கொருவர் ஆங்கிலத்தின் துணைகொண்டு தொடர்புகொள்ள முடியுமே!

"வடநாட்டவருக்கு ஆங்கிலம் வேண்டாமா என்றால், வேண்டும்; அவர்கள், இந்தியாவிற்கு அப்பால் உள்ள எந்த ஒரு நாட்டவருடனும் தொடர்புகொள்ள ஆங்கிலத்தைக் கற்றுத்தானேவேண்டும்! அப்படியிருக்க, அதே ஆங்கிலம்—அகில உலகப் பொது மொழியாகவிருக்கும் ஆங்கிலம், இந்தியாவின் பொது மொழியாகவும் ஏன் இருக்கக் கூடாது? ஆங்கிலத்தின் மீது நமக்குள்ள மோகத்தினால் அல்ல, நாம் இப்படிக் கூறுவது! ஆங்கில...

(4-ம் பக்கம் பார்க்க)

'இங்கும் அங்கும் சில இடங்களைக் கைப்பற்றலாம்'

'சட்ட சபையில் பெரும்பான்மை கிடைக்காது'

திருச்சி முடிவு பற்றி காமராசர் ஆரூடம்!

திருச்சி, மே 25—

"திராவிட நாடு பிரச்சினை தேர்தல் பிரச்சினையாகக் கொள்ளப்படுமானால், மக்கள் தீர்ப்பு எவ்வாறு இருக்கும் என்பதில் எனக்குத் துளியும் ஐயமில்லை.

"இங்கும் அங்குமாக சில இடங்களைக் கைப்பற்றக் கூடும்; ஆனால், சட்டசபையில் பெரும்பான்மையை திராவிட முன்னேற்றக் கழகத்தால் பெற முடியாது"

இவ்வாறு, ஆருடம் கூறியுள்ளார், லால்குடியில் ஒரு பள்ளியைத் திறந்துவைத்த பொழுது முதலமைச்சர் காமராசர்.

"சுதந்திரத் திராவிட நாட்டை நிர்மாணிப்பது என்பது இக்கால சூழ்நிலையில் சாத்தியமானதல்ல; அத்தகைய தீர்மானத்தைக் கொண்டிருப்பவர்களுக்கும் இந்த உண்மை தெரியும். இருந்தாலும், ஏதோ ஒரு கட்சியை நடத்தி வருகிறோமே என்பதற்காகவே, அதுபோன்ற ஒரு முடிவை நிறைவேற்றி இருக்கிறார்கள்"

மேற்கண்டவாறும் முதலமைச்சர் அதே விழாவில் பேசி இருக்கிறார்.

அவர் மேலும் பேசும்பொழுது குறிப்பிட்டிருப்பதாவது :—

"இவர்களின் பேச்சைக் கேட்டு பிரிவினை மனோபாவத்திற்கு இடம் கொடுக்காமல் மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இவர்கள் தேர்தலில் கலந்து கொள்ள முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும; ஏனெனில், இது வரையில் திரைமறைவில் இருந்த இவர்கள் மக்கள் ஆதரவைப் பெறுவதற்காகத் தங்கள் கொள்கைகளை, வெளிப்படையாகக் கூறவும், அதைக் கொண்டு மக்கள் இவர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்கவும் வாய்ப்பு நேருகிறது"

"எப்படி இருந்தாலும் அவர்கள் வெளியே வந்துவிட்டார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். திராவிட நாடு பிரச்சினை தேர்தல் பிரச்சினையாகக் கொள்ளுமிடத்து, மக்கள் தீர்ப்பு எவ்வாறு இருக்கும் என்பதில் சந்தேகமில்லாததால், அப்பிரச்சினைக்கு இறுதியாக முடிவு கட்டப்பட்டு விடும்"

உழவின் சிறப்பை மக்களுக்கு உணர்த்த!

கம்போடியாவின் பிரதமரும், அரசாங்க உயர்தர அதிகாரிகளும், வருகிற சனிக்கிழமை தினம் வயல்களில், மற்ற உழவர்களுடன் சேர்ந்து தொழில் செய்வதென முடிவிற்கு வந்திருக்கிறார்கள்.

இதே கருத்தை, கம்போடியாவின் முன்னாள் பிரதமரும் வலியுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

வருமான ஏற்றத் தாழ்வு நீங்க!

மக்கள் சபையில் தனிஉறுப்பினர் பிரேரபணை நிறைவேறியது

புதுடில்லி, மே 25—

"சமுதாயத்தில் பல்வேறு பிரிவினரிடத்திலேயும் வருமானம் சம்பந்தமாகக் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்க தக்க நடவடிக்கைகளை அரசியலார் எடுக்க வேண்டும்"

என்று சிபாரிசு செய்யும் தனி உறுப்பினர் பிரேரபணை மக்கள் சபையில் நிறைவேறியுள்ளதெனத் தெரிகிறது.

சாரநாத் வர!

50 ஆயிரம் பேர் மனுச் செய்திருக்கின்றனர்

சாரநாத், மே 25—

சாரநாத் முதலிய புத்த யாத்திரீக இடங்களுக்கு, வரவேண்டுமென்று 'பாஸ் போர்ட்' கோரி சுமார் 50,000 பேர் இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும் மனுச் செய்திருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

சயாமிலிருந்து பிரபல [illegible] உட்பட [illegible] ஜூன் [illegible], இந்தியாவில் சாரநாத் உட்பட பிரபல [illegible] புத்த [illegible]ருக்கு வரப்போகின்றனர் என்று [illegible] போதி [illegible] இருக்கிறதாக.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 26—5—'56 சனி

வெற்றிப் பாதை!

நாம் வாழும் பகுதி திராவிடம்; அது, இன்றைய தினம் சுதந்திரத்துடன் விளங்கவில்லை. வடவர் ஏகாதிபத்தியத்தின்கீழ் கட்டுண்டு கிடக்கிறது.

அதன் தொழில் துறை அடைபட்டுக் கிடக்கிறது. அதன் இயற்கை வளம் பயன்படுத்தப்படாமலே அலட்சியப் படுத்தப்பட்டு வருகிறது.

அதன் மக்கள் இல்லாமையால் இடர்பட்டுக் கிடக்கிறார்கள். வேலை இன்மைக்கும், பஞ்சத்திற்கும், பட்டினிக்கும், தொத்து நோய்களுக்கும் பலியாகித் தவிக்கின்றனர்.

இந்த அவல நிலையை மறுப்பவர் இல்லை. மாற்றந்தேடும் மனம் படைத்தவர், நம்மைவிட வேறு எவரும் இல்லை.

நமது திராவிடம் தாழ்ந்துள்ள நிலையையும், வேண்டுமென்றே மேலும் தாழ்த்தப்பட்டு வரும் ஓரவஞ்சனையையும் இப்பகுதி காங்கிரஸ் கட்சியினரில் பெரும்பான்மையினர், தம் நெஞ்சாரத் தெரிந்திருந்தபோதிலும், அவ்வுண்மையை வெளிப்படையாகக் கூறத் துணியாததுடன் மட்டுமல்லாது, அதனைக் கூறுவோருக்கு மறுப்புக் கூறும் பாதகத்தையும் செய்து வருகின்றனர். உண்மை நிலையை ஒளியாது நயமாகக் கூறும் இரண்டொரு காங்கிரஸ் கட்சியினர்கூட, காங்கிரஸ் மேலிடத்துக் கோபத்திற்கஞ்சி, கெட்டியாக வாய் மூடிக்கொள்கின்றனர்.

திராவிடத்தின் முழு விடுதலைக்கும் நாமே நம்மிச்சையாகப்பொறுப்பேற்றுக்கொண்டிருப்பதுபோன்றே, இடைக்காலத்தில் திராவிட மக்களுக்கு இழைக்கப்பட்டுவரும் கேடுகளைக் களைந்தெறிந்து, மேலும் கொடுமை இழைக்காவண்ணம் தடுத்து நிறுத்தும் பொறுப்பான கடமையும் நம்மீது சுமந்திருக்கிறது. நாம் அதிலிருந்து தப்ப முயன்றாலும், அப்பொறுப்பு நம்மை விட்டு விலகிச்செல்வதாகக் காணோம்.

அந்தப் பொறுப்பை ஏற்க—எவரும் முன்வரவில்லை. எவருக்கும துணிவு இருக்கவும் காணோம். அழுக்காறு கொண்டு வாய்கிழிய வசைபாட மட்டும இரண்டொரு ஆட்கள் இருக்கின்றனர்.

ஆகாய விமானப் படையிலிருந்து மாற்றான் நம்மைத் தாக்கும பொழுது, கடற்படையைக் கொண்டு அத்தாக்குதலுக்கு எதிர்த்தாக்குதல் நடத்த முடியாது. ஆகாய விமானப் படையிலிருந்துத் தாக்கும் மாற்றானைக் கடற்படையைக் கொண்டு எதிர்க்க முடியாது என்றால், வெறும் காலாட்படையைக் கொண்டுமட்டுமே போர் தொடுப்பது எவ்வாறு சாத்தியமாகும் என்பது சிந்திக்கத்தக்கது. இயலக்கூடும் என நம்புவது அல்லது நம்புவதுபோல நடிப்பதும் பேசி வருவதும், பிறரை ஏமாற்றுவதிலும் தம்மை தாமே முடிவாக ஏமாற்றிக் கொள்ளுவதிலுமே வந்து முடிவுறும்.

எதிரி இல்லாத இடத்தில், எப்பொழுதோ அங்கு இருந்தான் என்பதற்காக, அந்த இடத்திலேயே வாள் வீசிக்கொண்டிருப்பது விவேகமாகாது. அப்போக்கை மேற்கொண்டு ஒழுகுபவரை, இலட்சியம் வெற்றி பெறுவதில் துளியும் கவலையில்லாதவர் எனப் பிறர் கேலி பேசுவதற்கும் இடமாகிவிடும்.

திராவிடத்தை விடுவிப்பதில், நமக்குத் திரிகரண சுத்தியாகப் பற்று இருக்குமானால், அதை மறுக்கும் மாற்றான் தங்கி இருக்கும் கோட்டையை நோக்கியே நமது படைவரிசை செல்லவேண்டும். எதிரி எங்கு பாதுகாப்பாகத் தங்கி இருக்கிறானோ, அங்கு சென்று, முகத்துக்கு நேராக நமது விடுதலை முழக்கத்தை முழங்கியாக வேண்டும்.

இதுதான் ஆற்றல் மிகுந்த அரசியல். அனுபவம் காட்டும் படிப்பினை. குறிக்கோள் வெற்றியடைய வேண்டும் என்ற உறுதிப்பாடு உடையவர் மேற்கொள்ள வேண்டிய சிறந்த போர் முறை.

இப்போர் முறையைத் தூற்றுவது, இதை ஏற்ற நம்மவரை நிந்திப்பது, நாடு பெறும் நல்லெண்ணத்திற்கு அறிகுறியாகாது. எதையாவது கூறிக்கொண்டு பொதுவாழ்வில் இருந்தவரை இலாபம் எனக் கணக்கிட்டுக் கிடப்பவர்கள்தான் இதையும், அதற்கான ஒரு அரிய வாய்ப்பெனக் கொண்டு வீண்வம்பு பேச முந்துவர். அவர்கள் வாயுரையை நாடு ஏற்காது—மக்களும் அவர்களை ஒதுக்கித்தள்ளி விடுவர்.

மூடநம்பிக்கையை மக்களிடமிருந்து விரட்டுவது, ஜாதிப் பாகுபாட்டை ஒழித்துக் கட்டுவது, பகுத்தறிவை ஊட்டுவது, மடமையை அகற்றுவது, மனிதனை மனிதனுக்குவது என்ற இன்றியமையாக் கருத்துக்களை மக்களிடம் பரப்பி, அவைகளை ஏற்று நடக்க மக்களைத் தூண்டுவது என்ற அளவுடன், நாம, நமது கழகத்தின் பணியை கட்டுப்படுத்திக் கொண்டு இருந்தால், தேர்தலில் பங்கு கொள்ளுவது குறித்தோ, சட்ட சபையில் நுழைவது குறித்தோ சிந்திக்கவேண்டிய கட்டாயம் நமக்கு என்றும ஏற்பட்டு இருக்கவே முடியாது. இந்த வாதத்தில் பெரிய அளவு உண்மை இருக்கவும் இருக்கிறது.

ஆனால் நாமோ, அடிமையாககப்பட்ட நாட்டின் விடுதலைக்காகப் போராட முனைந்திருக்கிறோம். வடவர் ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து நம் திராவிடத்தை விடுவிக்கும் பெரும் பொறுப்புக்கு, நம்மை நாமே ஆளாக்கிக்கொண்டு இருக்கிறோம்.

ஒரு நாட்டின் விடுதலை கோருவோர், நாட்டை விடுவிக்கும் மார்க்கங்களில் ஒன்றெனஒப்புக் கொள்ளப்பட்டுள்ள, அதிலும் மிகச் சக்திவாய்ந்ததென மெய்ப்பிக்கப்பட்டுள்ள, சட்டசபை நுழைவை, ஏறெடுத்தும் பாரோம் — ஏற்கோம் எனப் பிதற்றுவதும், அந்த சக்திவாய்ந்த முறையை நாம் ஏற்றுக்கொண்டோம் என்பதற்காக நமது கழகத்தை இரண்டொரு திறந்த வாயினர் தூற்றுவதும், பயனற்றதும், ஆகும்—கேலிக்குரியதுமாகும்.

சட்டசபைக்குள் நுழைந்து நாட்டு விடுதலைக்கு முழக்கமிடுவது, குறிக்கோளை விரைந்து சென்று அடையும் வெற்றிப் பாதையாகும். அயதை அறியாது நம்மை ஏசித் திரிபவர் தாராளமாக ஏசித் திரியட்டும்.

தாக்குதலிலிருந்து தப்பிக்கத் திட்டம்

3,000 மைல் நீளத்திற்கு மின்சார வேலி அமைப்பு

வாஷிங்டன், மே 24—

அமெரிக்காவும் — கனடாவும் கூட்டாக சுமார் 3,000 மைல் நீளத்திற்கு அலாஸ்காவிலிருந்து பாபின் தீவுவரை ஒரு மின்சார வேலியை அமைத்துவருகின்றன வென்றும், அவ்வேலை முடிவடையும் நிலையிலிருக்கிறதென்றும், விமானத் தாக்குதல்களிலிருந்து அவ்வேலி பாதுகாப்பளிக்குமென்றும் செய்திகள் அறிவிக்கின்றன.

வேலி அமைக்க 40 கோடி டாலர் செலவாகுமெனவும், தற்போது 16,000 பேர் அப்பணியில் ஈடுபட்டிருப்பதாகவும், அமெரிக்கா—கனடா வடஎல்லையில் பனி நிறைந்த காட்டு வழியாக 1,400 மைல் நீளத்திற்கு வேலி செல்கிறது என்றும் தெரியவருகிறது.

மின்சார வேலி பல தளங்களைக் கொண்டிருக்கிறதென்றும், அவைகளின் எண்ணிக்கை இரகசியமாக வைக்கப்பட்டுள்ளதெனினும், கனடாவில் மட்டும் 50 தளங்களாவது இருக்குமெனவும் நம்பப்படுகிறதாம்.

வெகு தொலைவில் எதிரிகளின் விமானங்கள் வரும்போதே தெரிந்துகொண்டு தாக்குவதற்கு அவ்விமானங்கள் இருக்கும் இடம், வேகம், திசை ஆகியவைகளை அவ்வேலியில் பொருத்தப்பட்டிருக்கும் 'இயந்திர மூளை'கள்,—தானே இயங்கும் 'சிகனல்'கள் மூலம் கமிடப் பொழுதில் அறிவித்துவிடுமாம்.

அதன் மூலம், பகைவரின் விமானம் ஒன்று அமெரிக்க எல்லைக்குள் நுழைவது மிகுந்த சிரமமானதாகும எனக் கருதப்படுகிறது.

தெரிந்து கொள்ளுங்கள்!

1956 மார்ச் மாதத்தில் 99 சுரங்கங்களிலிருந்து கிடைத்த தகவல்களிலிருந்து, மொத்தம் 2,85,077 டன் இரும்பு-உருக்குத் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டதெனவும்; 49,972 டன் ஏற்றுமதி மார்க்கெட்டுக்கு அனுப்பப்பட்டதென்றும் தெரிய வருகிறது

இம்மாத இறுதியில 13,10,667 டன் இரும்பு கையிருப்பிலிருந்தது.

காங்கிரஸ் பொதுக்குழுவின் முன் ஆர்ப்பாட்டம்

மராட்டிய மக்கள் நடத்துவர்

கூட்டம் நடைபெறும் நாட்கள் கருப்புக் கொடி நாட்களாகக் கொண்டாடப்படும்

பம்பாய், மே 24—

பம்பாய் நகரை மராட்டியத்திலிருந்து பிரித்துவிட டில்லி ஏகாதிபத்தியவாதிகள் செய்த பெருமுயற்சிக்கு உறுதுணையாயிருந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக கூட்டம், வரும் ஜூன் 2-ந் தேதி பம்பாயில் கூடும்போது, மராட்டியரின் மனக் கோதிப்பை அவர்களுக்கு உணர்த்த பெரியதோர் ஆர்ப்பாட்டம், அணிவகுப்பு, மறியல் நடத்த மராட்டியர் திட்டமிட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

சர்வகட்சி சம்யுக்த மராட்டிய சமிதியின் பம்பாய் கிளையினர், ஜூன் 2-ந் தேதியன்று காங்கிரஸ் பொதுக்கூட்டம் நடைபெறும் போது ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக இப்போதே தொண்டர்களைப் பதிவு செய்து வருவதாகவும் தெரியவருகிறது.

'சமிதி'யின் பொதுக்குழு நாளை தினம் கூடுவதாயும், அப்போது ஆர்ப்பாட்ட முறை பற்றி முடிவு மேற்கொள்ளப்படும் என்றும் தெரியவருகிறது.

பம்பாயை மராட்டியத்திலிருந்து பிரித்துவிட முயற்சிக்கும் டெல்லி ஏகாதிபத்தியவாதிகளை எப்படி ஏனும் எதிர்த்துப் போராடி தங்கள் வழிக்குக் கொண்டுவர்துவிடவேண்டும் என்பதே சமிதியின் எண்ணம் என்று தெளிவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சம்யுக்த மராட்டிய கோரிக்கையை ஆதரிக்கும் காங்கிரசாரும், அகில இந்தியக் காங்கிரஸ் பொதுக் குழுக் கூட்டத்தின்போது மறியல் போராட்டம் நடத்த முடிவெடுத்திருக்கின்றனராம். ஏர்னெம்வ அவர்களின் 300 இளைஞர்களைத் தொண்டர்களாக்கியாயிற்று என்று கூறப்படுகிறது.

அத்துடன் காங்கிரஸ் பொதுக் குழு நடைபெறும் நாட்களை, 'கருப்புக்கொடி' நாட்களாகக் கொண்டாடவும் முடிவாகியிருக்கிறதாம்.

மூன்றும் வகுப்புப் பிரயாணிகள் தூங்குவதற்கு ரூ. 3 கட்டணத்தில் ஏற்பாடாம்!

கட்டணத்தை குறைப்பது குறித்து பரிசீலனையாம்!

சாமான் இரயில் விடுவதற்காக பிரயாணிகள் இரயில் எண்ணிக்கை குறையுமாம்

புதுடில்லி, மே 25—

"கச்சாப் பொருள்களையும், உற்பத்திப் பொருள்களையும் ஏற்றிச் செல்ல அதிகமான சாமான் இரயில்கள் விடுவதற்கு, இரண்டாம் திட்டத்தின்கீழ், பிரயாணிகள் இரயில்களின் எண்ணிக்கையைக் குறைப்பதைத் தவிர வேறு வழியில்லை,"

என்று, இரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரி, மக்கள் சபையில் இரு நாட்களுக்கு முன் தெரிவித்துள்ளார்.

'இரயில் பிரயாணத்தைக் குறைத்துக் கொள்ளுமாறு மக்களைத் தூண்டவேண்டும் என்று பிரதமர் நேரு அணையில் கூறியதை, இரயில்வே மந்திரி ஆதரிக்கிறாரா?' என்ற கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இப்படிப் பதில் கூறினாராம்.

மூன்றும் வகுப்புப் பிரயாணிகள் இரவில் தூங்குவதற்கு 'பெர்த்'கள் ஏற்பாடு செய்து தரப்படும் என்றும், அவற்றிற்கு ரூ 3 உபரிக் கட்டணம் விதிக்கவேண்டும் என்றும், இந்தக் கட்டணம் நியாயமானதே என்று தான் உணர்வதாயும் மந்திரி கூறியதுடன், மதிப்பீட்டுக் குழுவினர் இந்தக் கட்டணத்தைக் குறைக்கவேண்டும் என்று சிபாரிசு செய்திருப்பதால் அது குறித்து தாம் மீண்டும், பரிசீலிப்பதாயும் லால்பகதூர் சாஸ்திரி தெரிவித்திருக்கிறார்.

தொழில் துறை அபிவிருத்தி

எல்லாப் பிரதேசங்களிலும் சமமாக்குவதே நோக்கமாம்!

புதுடில்லி, மே 25—

'இந்தியாவின் பல்வேறு பிரதேசங்களிலும் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு ஒரு முக்கியத் திட்டம் பற்றி இந்திய சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறார்களாம்!

இதுபற்றி, ராஜ்யங்கள் சபையில் உற்பத்தி மந்திரி கே. சி. ரெட்டி அறிவிக்கையில், ஒரு காலவரையறைக்குள், எல்லாப் பிரதேசங்களையும் தொழில் துறையில் சமமாக அபிவிருத்தி செய்யவேண்டுமென்பதே சர்க்கார் உறுதியான கொள்கையாகும்' என்று குறிப்பிட்டார்.

'தொழில் துறையில் பின்தங்கிய பிரதேசங்களில் தொழிற்சாலைகளைத் துவக்குவதற்கு ஆட்சேபனை இல்லை; ஆனால் இத்தகைய தொழிற்சாலைத் துவககுவதற்கு அவசியமான மற்ற வசதிகள் இருக்கவேண்டும்' என்று, அவர் கூறினார்.

நேரு குறுக்கீடு!

இந்தச் சந்தர்ப்பத்தில், பிரதமர் நேரு குறுக்கிட்டு, 'முதலில் உற்பத்தி சாதனமே முக்கியம்; ஒரு

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

வருமான வரி விதிப்பிற்கு மந்திரிகள் அதிகாரிகள் 'டிமிக்கி?'

காங்கிரஸ் ஆளவந்தார்களின் சுயநலம், ஊழல் அம்பலம்

புதுடில்லி, மே 25—

காங்கிரஸ் ஆளவந்தார்கள் எத்தனை பெரிய சுயநலமிகள் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் ஏராளம உண்டு.

'வருமான வரி விதிப்பிலிருந்து, தப்புவதற்காகப் பெரிய முதலாளிகள் திருட்டுத்தனம் செய்கிறார்கள்; பொய்க் கணக்கு எழுதுகிறார்கள்,' என்று கூறப்படுகிறது, வருமான வரி இலாகாவினால்! ஆனால், இதே குற்றத்தை வேறுவிதமாக மந்திரிகள், பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், அதிகாரிகள் செய்திருக்கிறார்கள் என்பது வேதனைக்குரியதாகும்.

மந்திரிகள், அதிகாரிகள் ஆகியோருக்கு வருமான வரி விதிப்பு குறைவானதாக இருக்கிறது; இவர்களின் வருமானத்திற்கு நியாயமாக விதிக்க வேண்டிய அளவுக்கு வரி விதிக்கப்படவில்லை என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

வரவு-செலவுத் தணிக்கைக் குழுவினர் 1953—54-ம் ஆண்டிற்காகத் தந்துள்ள அறிக்கையில், சர்க்கார் இலாகாக்களில் காணப்படும் ஊழல்களை அம்பலமாக்கியிருக்கின்றனர். அவற்றுள் இந்த மந்திரிகளின் வருமான வரி 'டிமிக்கி'யும் சேர்ந்திருக்கிறது.

மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா

பி. டி. இராசன் வேண்டுகோள்

மதுரை, மே 24—

“மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா, 30-5-56 முதல் 5-6-56 முடிய 7-நாட்கள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

“இயல், இசை, நாடக அரங்குகளும், அறிஞர் பெருமக்களின் சொற்பொழிவுகளும் ஏழு நாட்களிலும் நடைபெறும்.

“தமிழ்ச் சங்கப் பொன்விழாவை முன்னிட்டு, அறிஞர்களின் சொற்பொழிவுகள், கட்டுரைகள் அடங்கிய ‘பொன்விழா மலர்’ ஒன்று, இம்மாதம் 30-ந்தேதி யன்று வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

“பொன்விழா சொற்பொழிவுகள் (இயலரங்கு), மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் மேற்கு-வடக்கு ஆடி வீதிகளில் ஒவ்வொரு நாளும் காலை 9-மணி முதல் 12-30 மணிவரை நடைபெறும்.

“தல்லாகுளம் தமுக்கம் மைதானத்தில் (சித்திரைப் பொருட்காட்சிக் கலையரங்கில்) நாள்தோறும் மாலை 6-மணி முதல் இரவு 1 மணிவரை இசை, நாடக அரங்குகள் நடைபெறும்.

“தமிழ் மக்கள் அனைவரும் விழாவிற்கு வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.”

என்று, விழாக் குழுத் தலைவரும், சென்னை சட்டசபை உறுப்பினரும், நீதிக்கட்சித் தலைவருமான திரு பி. டி. இராசன் அவர்கள் அறிவிக்கிறார்.

* * *

அலுவலகங்களுக்கு விடுமுறை

சென்னை, மே 24—

மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா மதுரையில் 30-ந் தேதி முதல் சிறப்பாக நடைபெறவிருக்கிறது. அவ்விழாவையொட்டி, மே மாதம் 30-ந் தேதியன்று மதுரை மாவட்ட மாநில அரசியல் அலுவலகங்கள் அனைத்திற்கும் விடுமுறையென அரசாங்கம் அறிவிக்கிறது.

திண்டுக்கல் வாடகை சைகிள்தொழிலாளர் சங்கம்

19-5-56-ல் மேற்படி சங்கத்தைச் சேர்ந்த சுமார் 200 பேர் சைகிளில் ஊர்வலமாகச் சென்று மதுவிலக்குச் சம்மந்தமாய்வாடகை சைகிள்களைச் சர்க்கார் பறிமுதல் செய்வதால் ஏற்படும் குறைபாடுகளை சப்-கலெக்டர், உதவி போலீஸ் சூப்பிரடெண்டு, மற்றும் இதர அதிகாரிகளையும் சந்தித்து, மானேஜர்கள் மூலம் தெரிவித்து வாடகை சைகிள்களைப் பறிமுதல் செய்வதிலிருந்து விதிவிலக்கு அளிக்கும்படி கேட்டுக்கொண்டனர். அதிகாரிகளும் ஆவன செய்வதாக வாக்குறுதி அளித்தனர்.

ஃகிராமப் பாதைகளை அபிவிருத்திக்கான கூட்டுறவுத் திட்டத்தின் கீழ், இந்திய சர்க்கார், மாநில சர்க்கார்களுக்குக் கடனாக மொத்தம் ரு 60, 69 இலட்சம் வழங்கியுள்ளனர். இத்தொகையில் ரு 46 58 இலட்சம் ஏற்கெனவே விநியோகிக்கப்பட்டு விட்டது

கப்பலேற்றப்பட்ட புத்தர் கொள்கை திரும்பவும் வரவேற்கப்படுகிறது

சாதிகள் ஒழிய, மூடச் சடங்குகள் மாள அதனை நாம் வரவேற்கிறோம்

சென்னையில் அண்ணா கருத்துரை

புத்தர் தோன்றிய இந்தியாவிலிருந்து அவரது கொள்கைகள் கப்பலேற்றப்பட்டதையும், இன்று அந்தக் கொள்கைகள் புதிய ‘மவுசு’டன் வரவேற்கப்படுவதையும் அண்ணா அவர்கள் அழகான உவமை அணியில் விளக்கிக் காட்டினார்—சென்னை புத்தர் விழாவில்!

புத்தர் எப்படி ஒரு பகுத்தறிவுவாதி மட்டுமல்ல—புரட்சிக்காரரும்கூட என்பதையும் விளக்கினார், அண்ணா!

சாக்ரடீசும், ஏசுநாதரும் உண்மை பேசியதற்காகக் கொல்லப்பட்டார்கள்; ஆனால், புத்தர் 80-ஆண்டுக்காலம் வாழ்ந்து பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்ய இயன்றது எப்படி என்பதையும் எடுத்துக் கூறினார், அண்ணா!

அவரது சொற்பொழிவின் ஒரு பகுதி நேற்றைய இதழில் வெளி வந்துள்ளது; எஞ்சிய பகுதி இங்கு தரப்படுகிறது:—

“மனிதர்கள் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் அரக்கத்தன்மை—அழுக்கு இருக்கிறது; இந்த அரக்கத்தன்மையை-அழுக்கை அவரவர்கள்தான் நீக்கிக்கொள்ள வேண்டும்—என்றார், புத்தர்!

“நம்மிலே பலர் இரவண பரம்பரை என்றும், சிலர் இராம பரம்பரை என்றும் கூறுவார்கள்; ஆனால், எல்லோருடைய உள்ளத்திலும் நன்மை செய்யும் ஆற்றலும், தீமை செய்யும் ஆற்றலும் இருக்கத்தான் செய்கிறது. சுரங்கத்திற்கு உள்ளே ஒளிவிடும் தங்கம் இருக்கிறது; அத்தோடு, பலவகைக் கனிமண்ணும் இருக்கத்தான் செய்கிறது; அந்தச் சுரங்கம் போன்றதுதான் மனித மனமும்!

“புத்தர், மதம்—கடவுள் இவற்றின் பெயரால் மக்கள் கொண்டிருந்த மூடப் பழக்கங்களைக் கண்டித்த—சாதிப் பாகுபாடுகளை, மனிதருக்கு மனிதர் நிலவும் வேறுபாடுகளை எதிர்த்த சிறந்த பகுத்தறிவுவாதி என்பதுமட்டுமல்ல—ஒரு பெரிய புரட்சிக்காரரும்கூட!

“அவர், அரண்மனையைவிட்டு வெளியேறியதே ஒரு பெரும் புரட்சியாகும்!

“இரண்டாவதாக, வைதீகர்களை நேருக்கு நேராக நின்று எதிர்த்து, வாதம் புரிந்து, பகுத்தறிவுக் கொள்கைகளை இன்றைக்கு 2,500 ஆண்டுகளுக்கு முன்பே பரப்பினார் என்பது, மற்றுமோர் புரட்சி!

“அந்தக் காலத்தில், வைதீகர்களுக்கு - புரோகிதர்களுக்கு அரசர்களே அஞ்சி நடுங்கினார்! அப்படிப்பட்ட நாட்களில், அரசரும் அஞ்சும் புரோகிதர்களுக்கு — வைதீகர்களுக்கு— அஞ்சாது, பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்திருக்கிறார் புத்தர்!

“புத்தர் இசைச் செய்ய முடிந்ததற்குக் காரணம், பாமர மக்களிடத்தில் அவர் பெற்றிருந்த செல்வாக்கு, ‘பாமரர்களுக்காக அரண்மனை வாழ்வையே விட்டொழித்தவர்’ என்றபெயர், ஆகியவைதான்!

“உண்மை பேசினார் என்பதற்காக, சாக்ரடீஸ் விஷமிட்டுக் கொல்லப்பட்டார்! ‘உண்மை பேசினேன்; உண்மை உணராதோர் எனக்கு, விஷம் தருகிறார்கள்; சாகிறேன் என்றாலும், நான் கூறிவந்த கருத்துக்கள் சாகமாட்டா,’ என்று கூறிவிட்டுத்தான் அவர் செத்தார்!

“‘உண்மை கூறினேன்; உணராதவர்கள் என்னைச் சிலுவையில் அறைகிறார்கள் ஆண்டவரே! அவர்கள் என்ன செய்கிறோம் என்பதறியாது தவறு செய்கிறார்கள்; அவர்களை மன்னித்துவிடு,’ என்று கூறிவிட்டுத்தான் செத்தார், ஏசுநாதர்!

“சாக்ரடீசும், ஏசுநாதரும், உண்மை பேசியதற்காக கொல்லப்பட்டார்கள்; ஆனால் அவர்களுக்குமுன் தோன்றிய, புத்தர் 80 ஆண்டுக் காலம்வரை உயிரோடு வாழ்ந்திருக்கிறார்; சுமார் 45 ஆண்டுகள் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்திருக்கிறார்!

“புத்தர் வாழ்ந்த காலத்தில் பெரியமொழியாகசமஸ்கிருதம் என்ற சுவமொழிதான் இருந்தது; என்றாலும் புத்தர், பாமர மக்கள் தன்னுடைய கொள்கைகளைப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக, பாலி மொழியிலேயே பேசினார்; தம் சீடர்களையும், பிட்சுக்களையும் பாலி மொழியிலேயே பாமரர்களிடையே பேசுமாறு கூறினார்.

“60 பேர்கள், புத்த கொள்கைகளை பாலிமொழி பேசியே பரப்பினர்கள் என்றே வரலாறு கூறுகிறது.

“இந்தியாவில் மட்டுமின்றி, இலங்கை, ஜப்பான், சீனா முதலிய கீழ்த்திசை நாடுகளிலும் புத்தர் கொள்கைகள் ஓங்கி வளர்ந்தன. உலகெங்கணும் புத்தர் கொள்கை போற்றப்படுகிறது.

“புத்தர் பிறந்த இந்தியாவிலிருந்து சென்ற கொள்கைகள், வெளிநாடுகளில் உரம் பெற்றன; இங்கே, அற்றுப் போய்விட்டன! இங்கிருந்து அவை துரத்தப்பட்டு விட்டன! ஆனால், இன்று மீண்டும் இங்கு திரும்பி வருகின்றன!

“ஏழைக்குடும்பத்தில் பிறந்த பெண், பணக்கார மாப்பிள்ளையை மணந்து கொண்டு, அங்கிருந்து அழகான மோட்டாரில் ஏறி, ஏழைத் தாய் தந்தையரைப் பார்க்க வருவது போல, இங்கே பிறந்த புத்தரின் கொள்கை, வெளிநாடுகளில் சென்று ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் போது, மீண்டும் தாய்நாடு, திரும்பி வருகின்றது—வரவேற்கப்படுகின்றது!

“புத்தர்கொள்கையே வருக! சாதிபேதங்கள் அழுத்தமாகக் கப்பிக் கொண்டிருக்கும் வேளையில் வந்து, அவை அழிய வழி செய்ய வருக!

“வைதீகம் தன் பிடியைத் தளர்த்திக் கொள்வதற்காக, புத்த கொள்கையே, வருக!

குருட்டு நம்பிக்கைகளை, ‘மோட்சம் — நரகம்’ என்ற அர்த்தமற்ற பிரமைகளை மதம்—ஆண்டவன் என்ற பெயரால் நிகழும் வேண்டாத சடங்குகளை அகற்ற, ஒழிக்க மக்களைப் பகுத்தறிவுப் பாதைக்கு இழுத்துச் செல்ல, புத்த கொள்கையே, வருக!—என்று கூற விரும்புகிறேன்.

“இந்தத் தலைமுறையிலேயே நாட்டை அழுத்தமாகக் கப்பிக் கொண்டிருக்கும் சாதிபேதங்களை அகற்ற, சத்தற்ற இதர நெறிகள் போதிக்கும் மூடச் சடங்குகளை மக்கள் விட்டொழிக்க, புத்த நெறி பரப்பும் இந்த விழாக்கள் பயன்பட வேண்டும் என்பது எனது ஆசை!

“மனித வாழ்வு, புத்தர் நெறியில், வள்ளுவர் நெறியில் அமையட்டும்!”

அண்ணா தலைமையில் சத்தியபாமா — ஏ. இராமன் திருமண விழா

புரட்சி நடிகர் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களது சோதரர் எம். ஜி. சக்ரபாணி அவர்களது குமாரி திருநிறைச்செல்வி சத்தியபாமா, சங்கரநாராயண மேனன் அவர்களது குமாரன் திருநிறைச் செல்வன் ஏ. இராமன் வாழ்க்கைத் துணைவர்களான திருமணவிழா 23—5—56 மாலை 5-மணி அளவில் சென்னை—இராயப்பேட்டை லாயிட்ஸ் சாலை, 155-வது இல்லத்தில் சிறப்புற நடைபெற்றது.

அண்ணா அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து, சிறப்புற திருமணத்தை நடத்தி வைத்தார்.

மணமக்கள், மலர்மாலைகள் சூட்டிக் கொண்டு, மோதிரம் மாற்றிக் கொண்டு, வாழ்க்கை ஒப்பந்தப் பத்திரம் வாசித்துத் துணைவர்களாயினர்.

மணமக்களை வாழ்த்தி தோழர்கள் க. அன்பழகன், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், மு. கருணாநிதி, டி. வி. சுந்தரம், வெளவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஆகியோர் பேசினர்.

மணமக்களுக்கு வந்திருந்த வாழ்த்துச் செய்திகளை தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் வாசித்தார். மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும், வாழ்த்துப் பத்திரங்களும் குவிந்தன.

விழாவில், சினிமா, நாடகத் துறையினர் பலரும் கலந்துகொண்டனர்.

விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் விழாத் துவக்கத்திலேயே தேநீர் விருந்தொன்று அளிக்கப்பட்டது.

விழா முடிவில், வந்திருந்தோர் அனைவருக்கும் தோழர் ஆர். எம். வீரப்பன் நன்றி நவின்றார்.

பின்னர், திருமதி எம். எல். வசந்தகுமாரி குழுவினரின் இன்னிசையும், திருவாவடுதுறை நாதசுர இசைப்பெரும் புலவர் டி. என். இராசரத்தினம் குழுவினரின் இன்னிசையும் நடைபெற்றது. (ந. நி.)

இணைக்கப்பட்ட பயிற்சித் திட்டத்தின்கீழ், கூட்டுறவு முறைகளில் பயிற்சியளிப்பதற்காக, 1955—56-ம் ஆண்டில் புதிதாக மொத்தம் பதினேழு பள்ளிக்கூடங்கள் திறந்து வைக்கப்பட்டன.

‘பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோற்க வேண்டும்!’

பம்பாய் காங்கிரஸ் முக்கியஸ்தரின் விருப்பம்

“பொதுத் தேர்தலில் ஒரு முறையாவது காங்கிரஸ் கட்சி தோற்க வேண்டும்; அப்பொழுதுதான், தன்னிடம் உள்ள குறைபாடுகளையும், மக்களின் துன்பங்களைக் குறித்துத் தனக்குள்ள அலட்சியத்தையும் அறிந்துகொள்ளுவது காங்கிரஸ் கட்சிக்கு சாத்தியமாகும்.”

இவ்விருப்பத்தை, பம்பாய் காங்கிரஸ் குழுக் கூட்டத்தில், மோகன்லால் தேசாய் எனும் முக்கிய காங்கிரஸ் உறுப்பினர் வெளியிட்டார்.

மேற்கு—மத்திய பகுதி புகை வண்டிகளில் பிரயாண நெருக்கடி மிகுதியாக இருப்பதின் காரணமாக மக்கள் படும் தொல்லைகளை எடுத்துக்காட்டும் வகையில் மேற்படி காங்கிரஸ் உறுப்பினர் பம்பாய் பிரதேசக் காங்கிரஸ் குழு கூட்டத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அந்தத் தீர்மானத்தின் மீது பேசும்பொழுதுதான் மேற்குறிப்பிட்டவாறு, ‘காங்கிரஸ் தோல்வி பெறவேண்டும்’ என்ற தனது விருப்பத்தை வெளியிட்டார்.

புகைவண்டிப் பிரயாணத்தில் தொல்லைப்படும் மக்களுக்கு வசதி செய்வதில் அலட்சியமாக நடந்து கொள்ளும் அரசாங்கம், தன் மீது நம்பிக்கைகொள்ளுமாறு மக்களைக் கேட்டுக்கொள்வது விந்தையாகும் எனவும் அவர் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

தீர்மானத்தை, பின்னர் வாபஸ் பெற்றுக்கொண்டார்.

திருமணம்

13 5-56 காலை 9-மணியளவில், சென்னை மீர்சாகிப்பேட்டை, இராமராவ் தோட்டம், எண்-2 இல்லத்தில், தோழர் கோபால்—தோழியர் சரோசா திருநிறை திருமணம், தோழர் மு. புரட்சி மணி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் முகவை-ஆர். எஸ். பாண்டியன், கோ. இளவரசு, டாக்டர் எம். ஏ. கரீம், எம். சி. ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்களுக்கு உறவினர்களும், நண்பர்களும் புத்தகங்களும், வாழ்த்து மடல்களும் வாசித்தளித்தனர். இத்திருமணத்தின் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரு. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டதைப் பெற்றோம்—நன்றி— பொருப்பாளர்.

க்ஷயநோயிலும் கொடுமையானது மதுவருந்தல்!

மதுப் பழக்கத்தால் மரணமாவோர் தொகை கூடுகிறது!

சென்ற ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் க்ஷயரோகத்தால் தாக்குண்டு இறந்தவர்களிலும் மதுப் பழக்கத்துக்கு ஆளாகியதால் மரணமானோர் தொகை கூடி இருக்கிறது.

மதுவிற்குப் பலியாகி இறந்தவர் தொகை 17,400.

பலவிதமான க்ஷயரோகங்களுக்கும் ஆளாகி இறந்தவர் தொகை 13,300.

கடந்த 10 ஆண்டுகளில் க்ஷயரோகயால் தாக்குண்டு இறந்தவர் தொகை மெள்ள, மெள்ளக் கூடியிருக்கும்பொழுது, மதுப் பழக்கத்துக்கு ஆளாகி இறந்தோர் தொகை ஐந்து மடங்கு பெருகி இருக்கிறது.

இரா. நெடுஞ்செழியன் தலைமை உரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றித் தருகிற தேவைகளை—காரியங்களை. எஸ்கிமோ மொழியோ, நீக்ரோ மொழியோ, உலகின் வேறெந்த மொழியோ நிறைவேற்றித் தருமானால், நாம் அதை ஏற்றுக்கொள்ளத் தயார். இன்றைய நிலையில், அகில உலக வாணிபத் தொடர்பு, அரசியல் தொடர்பு எல்லாம் ஆங்கிலத்தில் மட்டுமே முடியும்.

"அப்படியிருக்க, எதற்காக, இங்கே வழங்கப்படும் தபால் கார்டுகளில் இந்தி? திருச்சியிலிருந்து தஞ்சைக்கு எழுதப்படும் கார்டில்—'அஞ்சல் அட்டை'யில்—'முகவரி மட்டும்' 'பெயர்,' 'தொழில்:' 'தெரு,' 'ஊர்,' 'வட்டம்,' 'மாவட்டம்'—என்று தமிழில் அச்சிட்டிருந்தால் போதுமானதல்லவா?

"இங்கிருந்து டில்லிக்கோ, ஆமதாபாத்திற்கோ எழுதவேண்டுமானால் ஆங்கிலத்தில் அச்சிட்ட கார்டுகளை உபயோகித்துக்கொள்ளலாமே!

"14 தேசிய மொழிகளிலும் அச்சிட்ட தபால் சாதனங்களுடன், சிறிது சிறிது, எல்லா தபால் நிலயங்களிலும் ஆங்கிலத்தில் அச்சிட்ட சாதனங்களும் இருந்தால் போதுமானவையே! அப்படி இருக்க, இந்தியில் எதற்காகத் தபால் கார்டும், பணம் அனுப்பும் நமூனுவும் இருக்க வேண்டும்?

"நாம் இப்படி வற்புறுத்திக் கூறிவருகிற—ஆங்கிலமே இந்தியாவின் பொது மொழியாக இருக்கலாம் என்ற கொள்கையை, ஒரு காலத்தில், 'இந்தியைப் புகுத்தியே தீருவேன்' என்று ஆணவம் பேசிய ஆச்சாரியாரே ஏற்றுக் கொண்டிருக்கிறார், இன்று!

"ஆங்கிலமே இந்தியாவின் பொது மொழியாக இருக்கவேண்டும் என்ற தீர்மானம் ஒன்றை, ஆச்சாரியார் - பெரியார் - அண்ணா—நான்—ம. பொ. சி—ரா. பி. சேதுபிள்ளை முதலியோரடங்கிய கூட்டம் ஒன்று நிறைவேற்றியுமிருக்கிறது.

"வேர்ச் சொற்களும், ஆழமிகுந்த சொற்களும், உயர் தனிச் செம்மொழி என்ற பண்பும், இலக்கிய வளமும்கொண்ட தமிழ் தமிழ் மொழிக்கு இல்லாத சிறப்பு, இந்திக்கு என்ன இருக்கிறது?

"தமிழ் மொழியாலேயே உலகத்துடன் தொடர்புகொள்ள முடியாது என்றால், இந்தியாவில்—இலக்கியமோ, இலக்கணமோ, வளமான சொற்களோ இல்லாத இந்தியால் எப்படி முடியும்?

"இங்கிருந்து வடநாட்டிற்குப் போனால், நமக்கெல்லாம் இந்தி தெரியவேண்டாமா—என்று இக்குன்ன சிலர் கூறுகின்றனர்.

"வடநாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்து குடியேறி 30 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மக்களுடன் பழகி வருகின்றனர், சில வடநாட்டவர்! 'சௌகார்பேட்டை' என்று, ஊரின் ஒரு பகுதியையே தங்கள் பெயருக்கு மாற்றிவைத்திருக்கின்றனர்.

"தமிழ் மக்களோடு வாணிபத் தொடர்பு, வட்டிக் கடை தொடர்பு வைத்துக்கொண்டிருப்பவர்கள் அவர்கள்; தமிழ் மக்களோடு அன்றாடம் பழகித் தீரவேண்டியவர்கள் அவர்கள்; அவர்கள், இரண்டு தலைமுறையாகியும் இன்னும் தமிழ் கற்றுக்கொள்ளவில்லை. 'நமக்கு'என்று சொல்ல அவனுக்கு நா வளையவில்லை; 'நம்பன்கி' என்று இன்னும் பேசிக்கொண்டிருக்கிறான்; அப்படியிருக்கும் போது, இங்கிருந்து வடநாட்டிற்குச் சென்றால் இந்தி தெரியவேண்டாமா என்று கேட்கிறவர்களின் தன்மான உணர்ச்சியைப் பற்றி நாம் என்ன நினைப்பது?

"இங்கிருந்து 10 கோடி தென்னாட்டவருமா வடநாட்டிற்குச் சென்று வந்துகொண்டிருக்கிறார்கள்? விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள்தானே வடநாட்டவருடன் தொடர்பு கொள்பவர்களாயிருக்கிறார்கள்! அந்த விரல்விட்டு எண்ணக்கூடியவர்களுக்காக, இங்குள்ள அனைவருமே இந்தியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்பது என்ன நியாயம்? என்ன அவசியம்?

"எனவேதான், திராவிடருக்கு இம்மியளவும் இந்தி தேவை இல்லை என்று தி. மு. கழகம் திட்ட வட்டமாகக்கூறி வருகிறது; இந்தி ஆதிக்கம், நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பரவுவதை பலமாகக் கண்டிக்கிறது; எதிர்க்கிறது.

"இந்தியைத் தென்னாட்டவர், ஏற்பதானால், வடநாட்டவர் ஆதிக்கம் இங்கு வலுப் பெறும்; வடநாட்டு பாசிச — ஏகாதிபத்திய ஆட்சி நிலை பெறும் என்று எடுத்துக் காட்டுகிறது.

"பொருளாதாரத் துறையைப் பொறுத்தும், திராவிட நாடு தனி நாடாக—சுதந்திர நாடாகத் திகழ வேண்டுமென நாம் வற்புறுத்தி வருகிறோம்.

"இன்று பொருளாதாரத்துறையிலும், தென்னாடு, வடநாட்டவருக்கு அடிமைப்பட்டிருப்பதை நாம் சுட்டிக் காட்டுகிறோம்.

"நமது நாட்டுப் பொருளாதார முன்னேற்றத்திற்கு நாம் பாடுபட முடியாதபடி, அதிகாரங்கள் அனைத்தும் டெல்லியிடம் குவிந்து கிடக்கின்றன.

"பெரும் தொழிற்சாலைகள் துவக்குவது முதல், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் செய்வது வரை, எல்லாவற்றிற்கும் 'அனுமதி'க்கு டெல்லியிடம் காவடி எடுக்கவேண்டிய நிலை நிலவுகிறது. நமக்கு வேண்டிய காரியங்களைச் செய்துகொள்ள, டெல்லியிடம் கையேந்தி கெஞ்சவேண்டிய நிலை இருக்கிறது.

"முதல் ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரில் நிறைவேறிய அபிவிருத்தித் திட்டங்களுக்காக சுமார் 2,300 கோடி ரூபாய் வரை டில்லி சர்க்கார் செலவிட்டார்கள். இதில் ரூ. 100 கோடி கூட தமிழகத்திற்குக் கிடைக்கவில்லை.

"இப்போது முதல் திட்டத்தைப்போல இரண்டு மடங்கிற்கும் அதிகமான இரண்டாம் திட்டத்திலும், தென்னாட்டவருக்கு ரூ. 170 கோடிதான் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

"இந்த ஐந்தாண்டுத் திட்ட அக்கிரமத்தை — தென்னாட்டிற்கு இழைக்கப்படும் அநீதியை, நாம் மட்டுமல்ல—நல்லறிவாளர், நேர்மையாளர் பலரும் கண்டித்திருக்கின்றனர்.

"கடந்த எட்டாண்டுக்கால டில்லி ஆட்சியில், 'வடநாடுதான் வளருகிறது—தென்னாடு தேய்கிறது', என்பதை, தென்னாட்டுப் பிரபலத் தொழிலதிபர்கள் கண்டித்திருக்கின்றனர். 'சுதேசமித்திரன்', 'ஆனந்த விகடன்', 'கல்கி' போன்ற தேசிய ஏடுகள் கேலிச் சித்திரம் தீட்டி கண்டித்திருக்கின்றன.

"வடநாட்டில் பெரும் பெரும் தொழிற்சாலைகள், அணைக்கட்டுகள் எல்லாம் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருவதையும், தென்னாட்டில் அவைபோன்ற ஏதும் இல்லை என்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

இந்த நிலைமை, தென்னாட்டின் மீது வடநாட்டவர் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பதால்தான் நிலவ முடிகிறது?

"திராவிடத்திற்கு என்ன இல்லை, தனியாக வாழ!

"1,500 மைல் நீள கடற்கரையும், எண்ணற்ற துறைமுகங்களும் உண்டு—வடநாட்டிற்கு இல்லாத வகையில்! ஆனால், இந்தத் துறைமுகங்கள் மூலம் கிடைக்கும் இலாபம் எல்லாம்—வரி எல்லாம், வடநாட்டவருக்குத்தானே பயன்படுகிறது?

"இந்தியாவில் விளையும் காப்பியில் 100-க்கு 90 பங்கு தென்னாட்டில் விளைகிறது. தேயிலை 100-க்கு 45 பங்கு இங்கேதான் விளைகிறது.

"இரப்பர், சந்தனம், தேக்கு விளையும் காடுகள் அத்தனையும் இங்கே! முத்து விளையும் கடல் இங்கே! யுரேனியம்—அணுத் தாதுப் பொருள் இங்கே! தங்கம் இங்கே—கோலாரில்! இரும்பு இங்கே—சேலத்தில்! மாங்கனைசட், பாக்சைட் இங்கே உண்டு! நிலக்கரி 200 கோடி டன்—நெய்வேலியில்! அதுமட்டுமின்றி, 2,000 உபபொருள்கள் தயாரிக்க முடியும் நெய்வேலி மண்ணைக் கொண்டு! இத்தனையுமிருந்தும், இந்த வளங்கள் எல்லாம் இந்த நாட்டு மக்களுக்குப் பயன்பட முடியாது போவானேன்?

"இத்தனை வளங்களையும் கொண்ட திராவிடம் தனி நாடாக ஏன் வாழக்கூடாது? இத்தனை வளங்களையும் வடநாட்டவர் கொள்ளையிட்டுச் செல்ல அனுமதித்துவிட்டு, வாழ்வின்றி நம் நாட்டவர் ஏன் தவிக்கவேண்டும்?

"அரசியல், பொருளாதாரத் துறைகளில், தென்னாட்டவர்மீது வடநாட்டவர் கொண்டுள்ள ஆதிக்கத்தை அழித்துத் தனித் திராவிட சமதர்ம ஜனநாயகக் குடியரசுக் கூட்டாட்சி நிறுவவேண்டும் என்ற நமது இலட்சியம், எந்த வகையால் தவறுடையது?

"திராவிடத்தில், மக்களின் இன்றியமையாத் தேவைகளுக்கான பொருள் உற்பத்தியை அரசாங்கமே நடத்தும்—விநியோகிக்கும் எவரும் மக்களின் உழைப்பைச் சுரண்டி, இலாபக்கோட்டை கட்டும் நிலை இருக்காது. 'சக்திக்கேற்ற உழைப்பு—தேவைக்கேற்ற வசதி' என்ற சமதர்மக் கோட்பாடுதான், நம்முடையது.

"இந்த இலட்சியத்திற்காகத்தான்—அதனை ஈடேற்றிக் கொள்ளத்தான் நாம் இப்போது அறிவுப் படையையும், ஆற்றல் படையையும் திரட்டிக் கொண்டிருக்கிறோம். இந்தப் படையினர் நமது இலட்சியத்தை ஏற்றுக்கொண்டுவிட்டால் நமது இலட்சியம் ஈடேறுவது திண்ணம்.

"எனவே, நாட்டு மக்களை நமது இலட்சியத்தை நோக்கி—தாயக விடுதலை என்ற இலட்சியத்தை நோக்கி இழுத்துவரக்கூடிய அறிவுப்படையும், ஆற்றல் படையும் பெருக இந்த மாநில மாநாடு பெரிதும் பயன்பட வேண்டும் என்று விரும்புகிறேன்"

தொடர்ந்து பேசிய பொதுச் செயலாளர், தி. மு. கழகம் பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டுமா வேண்டாமா என்பது குறித்து நடைபெற்ற வாக்கெடுப்பு குறித்து மக்களுக்கு, விளக்கி, மக்கள் தங்கள் எண்ணத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டு த[illegible] உரையை முடித்தார்.

திருமதி சந்தானலட்சுமி மறைவு

பிரபல தமிழ் சினிமா நட்சத்திரமான எம். ஆர். சந்தானலட்சுமி அவர்கள், நேற்று மதுரை அருகே கார் விபத்து ஒன்றில் சிக்கி இறந்துவிட்டதாக அறிய வருந்துகிறோம்.

அவர் தம் மகள், மகன், மருமகன் ஆகியோருடன் நாகர்கோவிலிலிருந்து சென்னை திரும்பிக் கொண்டிருக்கையில், மதுரை இராசபாளையம் சாலையில், கல்லுப்பட்டியிலிருந்து 3 மைல் தொலைவில் கார் சுவற்றில் மோதியதால் விபத்திற்குள்ளாகி பலத்த காயம்பட்டதாகவும், அருகிலிருந்த இராசபாளையம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின், மதுரைக்கு கொண்டுவரப்பட்டதாயும், அங்கு மாலை 4 மணியளவில் காயங்களுக்குப் பலியானதாகவும் தெரியவருகிறது.

கார் ஓட்டிவந்த பொன்னுசாமிக்கும் பலத்த காயம் பட்டிருப்பதாகத் தெரிகிறது.

திருமதி சந்தானலட்சுமி தமிழ் திரைப்பட உலகில் குறிப்பிடத்தகுந்த நட்சத்திரமாகத் திகழ்ந்தவர். நீண்ட நாட்களாகவே சுயமரியாதை இயக்கத்தில் பற்றுக் கொண்டிருந்தவர்.

அவர் கடைசியாக 'மதுரை வீரன்', 'காலம் மாறிப் போச்சு' முதலிய தமிழ் திரைப் படத்தில் நடித்திருக்கிறார்.

அண்மையில் திருச்சியில் நடைபெற்ற தி. மு. கழக மாநில மாநாட்டில், நான்கு நாட்களும் அவர் கலந்துகொண்டார்.

அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக. (ஆ - ர்.)

வேதனையுமல்ல—வேடிக்கையுமல்ல!

கொழும்பு, மே 25—

இலங்கை அரசியலாரின் சிங்கள மொழி மசோதா தமிழருக்குப் பல சலுகைகள் தருவதாயிருக்கிறதெனக் கூறி, அதை எதிர்த்து உயிர் நீங்கும்வரையில் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார், இலங்கை பல்கலைக் கழகப் பேராசிரியர் ஜெயசூரியா என்பார்! பிரதிநிதிகள் சபை கட்டிடத்தின் நுழைவு வாயில் படிக்கட்டில் உட்கார்ந்துகொண்டு அவர் இந்த உண்ணாவிரதத்தைத் துவங்கினாராம். மேலும் அவருடன் இரண்டு புத்த பிட்சுக்களும் உண்ணாவிரதத்தில் பங்கேற்று இருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

இந்த உண்ணாவிரதத்தை இலங்கைப் பிரதமர் கண்டித்து, 'தங்களின் குறைந்தபட்ச கோரிக்கைகள்கூட நிறைவேறாதிருப்பதாக தமிழர்களும், முகம்மதியர்களும் வேதனையுடன் தெரிவிக்கும் போது, உண்ணாவிரதமிருக்கும் பேராசிரியரின் போக்கு, மசோதா மேலும் கடுமையாக இருக்கவேண்டுமெனக் கோருவது எதிர்ப்பாளர்களுக்குஉதவி புரிவதாகும்' எனக் கூறியுள்ளார்.

தொழில் அபிவிருத்தி......

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பெரிய தொழிற்சாலையைத் துவக்குகையில், பல பிரச்சினைகளை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டியது அவசியமாகும்; சில குறிப்பிட்ட இடங்களில், சில குறிப்பிட்ட தொழிற்சாலைகளைத் துவக்க முடியும்; உதாரணமாக, எஃகு தொழிற்சாலையை இரும்பும் நிலக்கரியும் கிடைக்கும் இடங்களில்தான் நிறுவமுடியும்."

சூளை நகர இளைஞர் கழகம்

27-5-56 காலை 8-மணிக்கு கல்யாண மேஸ்திரி தோட்டம், குமாரசாமிராஜாபுரம் ஆகிய இடங்களில் திரு. ஜி. நடராசன் தலைமையில், சுகாதாரப் பிரச்சாரமும், இலவசப் பால் விநியோகமும் நடைபெறும்.

நிசாம் இப்போதும்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"சொத்திற்கு 'எஸ்டேட் வரி' உண்டா, இல்லையா?—என்பது தெரியவில்லை; இந்த நிசாமைப் பொறுத்து, நாம் எல்லாம், சமத்துவம் காண எத்தனை தலைமுறை காத்திருக்க வேண்டும்? பெரும் செல்வமுடையவர்கள், முதலீடு செய்யுமாறு கோரப்படாவிட்டால், ஜனநாயகம், ஆபத்திற்குள்ளாகும்!

"பணக்காரர்களுக்குத் தரப்படுகிற சலுகைகள் நிரந்தரமானவையாக இருக்கும்போது, கோடிக்கணக்கான ஏழைகள் இரண்டாம் திட்டத்திற்காகத் தியாகம் செய்ய வேண்டுமென்று கூறுவது வேடிக்கையாக இருக்கிறது,"

என்றும்கூட அசோக் மேதா கூறியிருக்கிறார்.

பொதுக்கூட்டம்

★

காங்கேயநல்லூர்

அழகிரி திடல்

27—5—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:

எம். சண்முகம்

பேசுவோர்:

வில்வநாதன்

இளஞ்செழியன்

கருத்தோவியன்

மு. கோதண்டன்

இரவு 10 மணிக்கு திருக்குறள் நாடக மன்றத்தாரால, 'மனோகரா' நாடகம் நடைபெறும்

★

பிரான்மலை

காந்தி சதுக்கத்தில்

அறிஞர் அண்ணா மன்ற ஆண்டுவிழா —தி. மு. கழகத் துவக்கவிழா

28—5—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:

சே. சி. சாமி

பேசுவோர்:

மு. கருணாநிதி

எஸ். முத்து

குறிப்பு: மாலை 5 மணிக்கு ஊர் வலம் நடைபெறும்.

மு. கருணாநிதி

சுற்றுப்பயணம்

மே 27: இடையக்கோட்டை
28: பிரான்மலை
,, (இரவு) சிவகம்புணரி—நாடகம்
29: திருக்கோட்டியூர்
30: சிவகங்கை

திருமணம்

27—5—56 காலை 9-மணியளவில், சென்னை--திருவல்லிக்கேணி, சின்னப்ப இராவுத்தர் தெரு, 28-ம் எண் இல்லத்தில், தோழர் இளம்பரிதி தலைமையில், தோழர் பா. சீனிவாசன் — தோழியர் இந்திராணி திருமணம் நடைபெறும். தோழர் நீலநாராயணன் வரவேற்பு வழங்குவார்; தோழர்கள் சி. பி. சிற்றரசு, கண்ணதாசன் வாழ்த்துரை வழங்குவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

27—5—56 காலை 10 மணிக்கு, சென்னை — வண்ணையம்பதி இளங்கோ கலைமன்றத்தில், திரு. ஏ. கே. பெருமாள் தலைமையில், 'தமிழகத்தில் அறிஞர் அண்ணா' என்ற பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

வடசென்னை குறள் நெறிக் கழகச் சொற்பயிற்சிக் கூட்டம் 26—5—56 சனி மாலை 6-30 மணியளவில் தோழர் ப. கோ. வீரராகவன் தலைமையில் நடைபெறும். அவ்வமயம் 'நிலக் கொடை இயக்கம்' எனும் பொருள் பற்றித் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

27-5-56 காலை 10மணியளவில், சென்னை 39-வதுவட்ட தி. மு கழகப் பணிமனையில், தோழர் வைகறைச் செல்வன் தலைமையில் 'புதுமை' எனும் பொருள்பற்றித் தோழர்கள் பலர் பேசுவர்.

திருவள்ளுவர் விழா

சென்னைக் கல்விச் சங்கத்தின் ஆதரவில், 27-5-56 மாலை 5 மணிக்கு, பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோட், ஆண் பள்ளியில் 'தமிழர் செல்வம்' என்னும் பொருள் பற்றி திரு. த. வே. முருகேசனார் தலைமையில்; திரு. கு. வே. இராமகோடி, திரு வி. பா. கோவிந்தசாமி சொற்பொழிவாற்றுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் .சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.